பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 06 2026** **06 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** உலக நாடுகளுக்கு இந்தியா ஒரு சிறந்த நட்பு நாடாக உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** நவீன உலகில் மன அழுத்தம், மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில், சமண மதத்தின் போதனைகள் அமைதியை தருவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

**3.** கொப்பரை மற்றும் பச்சைப்பயறு கொள்முதலுக்கான அனுமதியை விரைந்து வழங்குமாறு மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

**4.** கைத்தறி நெசவாளர்களுக்கான நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அத்துறைக்கான அமைச்சர் திரு. விஜய் பாலாஜி அறிவுறுத்தியுள்ளார்.

**5.** தெற்காசிய த்ரோபால் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் சாம்பியன் பட்டத்தை வென்றன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலக நாடுகளுக்கு இந்தியா ஒரு சிறந்த நட்பு நாடாக உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பாரீசில் இந்திய வம்சாவளியினர் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் நேற்று பேசிய அவர், நாடுகளுக்கு இடையிலான உறவுகள் முன்பு வர்த்தகத்தால் தீர்மானிக்கப்பட்டதாகவும், ஆனால் இன்று வர்த்தகத்திற்கு இணையாக நம்பிக்கையும் மிக முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு நாடும் நிலையான வர்த்தக உறவுகளை எதிர்பார்ப்பதாகவும், நீண்டகால அடிப்படையில் நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய நாடுகளை தேடுவதாகவும் திரு. மோடி தெரிவித்தார்.

இந்தியா அத்தகைய நம்பிக்கைக்குரிய இடமாக மாறி வருவதாகவும் அவர் கூறினார்.

வரும் தலைமுறையினருக்கு பயன் தரும் வகையில் பல்வேறு துறைகளில் இந்தியா முதலீடுகளை செய்து வருவதாகவும், இதனால் நாட்டின் இலக்குகள் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

நவீன உலகில் மன அழுத்தம், மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில், சமண மதத்தின் போதனைகள் அமைதியை தருவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

ராய்ப்பூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், சமண தத்துவங்களும், சிந்தனைகளும் இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாக கூறினார்.

சமண மத த்தின் போதனைகள் அமைதி மற்றும் சுய கட்டுப்பாட்டுக்கு வழிகாட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அமைதிக்கு அகிம்சை, கருணை, தாராள மனப்பான்மை மிகவும் அவசியம் என்றும் திரு. ஓம் பிர்லா குறிப்பிட்டார்.

<<<<>>>>

கொப்பரை மற்றும் பச்சைப்பயறு கொள்முதலுக்கான அனுமதியை விரைந்து வழங்குமாறு மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தலைமையில் நேற்று புதுதில்லியில் காணொலி வாயிலாக நடைபெற்ற

விலை ஆதரவு திட்டம் தொடர்பான கூட்டத்தில் மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. வினோத் கலந்துகொண்டு பேசினார்.

பச்சைப்பயறு மற்றும் கொப்பரை கொள்முதலுக்கு தமிழக அரசால் அனுப்பப்பட்டுள்ள கருத்துருவை உடனடியாக பரிசீலிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

பச்சைப்பயறு கொள்முதல் அளவை உயர்த்தி வழங்குமாறும் மத்திய அரசிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் தவெக ஆட்சியில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களில் ஆளும் கட்சியனரே ஈடுபட்டு கைதாகி வருவதை அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

முதலமைச்சர் திரு. விஜய் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

குற்றச் சம்பவங்களில் கைதாகியுள்ள ஆளும் கட்சியினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தேசிய கல்விக் கொள்கை வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட உதவும் என்று தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று தனியார் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், மத்திய அரசின் இந்த கல்விக் கொள்கை நாட்டை உலகில் ஒரு வளர்ந்த நாடாக மேம்படுத்த உதவும் என்று கூறினார்.

தற்போதுள்ள கல்விமுறை பட்டதாரிகளை வேலை தேடும் நபராக உருவாக்கியுள்ளது என்றும், ஆனால் புதிய தேசிய கல்விக்கொள்கை தொழில்முனைவோராக மாணவர்களை மாற்றும் வகையில் அமைந்துள்ளது என்றும் கூறினார்.

<<<<>>>>

கைத்தறி நெசவாளர்களுக்கான உதவித்தொகை, மூலப்பொருள் கொள்முதல் மானியம் உள்ளிட்ட நலத்திட்டங்களை விரைந்து

செயல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அத்துறைக்கான அமைச்சர் திரு. விஜய் பாலாஜி அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், நெசவாளர் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, சூரியமின்சக்தி அமைப்பதற்கு மானியம் வழங்குதல் போன்ற திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

காஞ்சிபுரம் பட்டு சுற்றுலா திட்டத்தை விரைவில் செயல்பாட்டுக்கு கொண்டு வருமாறும் அவர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

தூய்மையே சேவை இயக்கம் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் பள்ளிகளுக்கு இடையிலான தூய்மைப் போட்டி நேற்று நடைபெற்றது.

இந்தப் போட்டி தங்களுக்கு புதிய அனுபவத்தை தந்ததாகவும், பயனுள்ளதாக இருந்ததாகவும் மாணவி ஒருவர் தெரிவித்தார்.

**(Voice Byte - Student - 39 Sec)**

<<<<>>>>

திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் திரு. ஓம்பிரகாஷ் மீனா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று இப்பணிகளை நேரில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், நடைமேடைப் பணிகள் நடைபெற்று வருவதால் ரயில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், இதனால் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

எனவே திட்டமிட்டபடி அனைத்துப் பணிகளையும் வரும் 30ஆம் தேதிக்குள் முடித்து ரயில் போக்குவரத்தை தொடங்க அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

வளிமண்டல காற்றழுத்த சுழற்சி காரணமாக தமிழகத்தின் அநேக இடங்களிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம்

உள்ளிட்ட 27 மாவட்டங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சேலம் மாநகரில் நேற்று பரவலாக மழை பெய்தது. இதனால் நகரின் தாழ்வான பகுதிகளான மணியனூர், கந்தம்பட்டி, கருங்கல்பட்டி பகுதிகளில் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்தது.

சாலைகளில் தண்ணீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

<<<>>>

*இருவரிச் செய்திகள்*

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான சிந்து நதிநீர் ஒப்பந்தம் காலாவதியாகி விட்டதாக இந்தியாக கூறியுள்ளது.

-------------

அமெரிக்கா - ஈரான் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தவறானது என்று அமெரிக்க முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. ஜான் போல்ட்டன் விமர்சித்துள்ளார்.

-------------

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான பிரதமரின் வேலைவாய்ப்பு திட்டம் குறித்த சிறப்பு நிகழ்ச்சியை இன்று சென்னையில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகம் நடத்துகிறது.

-------------

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையில் இருந்து தாராபுரம் நகராட்சியின் குடிநீர் தேவைக்காக இன்று முதல் இம்மாதம் 23ஆம் தேதி வரை தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

-------------

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடப்பாண்டில் நடத்திய குடிமைப் பணி தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஊக்கத்தொகை பெறுவதற்கு இன்று முதல் வரும் 30ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று அரசு கூறியுள்ளது.

-------------

காரைக்கால் அருகே கீழக்காசாக்குடி பகுதியில் அமைந்துள்ள பழமைவாய்ந்த ஸ்ரீசீதாலதேவி மாரியம்மன் ஆலய தீ மிதி உற்சவத்தை ஒட்டி நேற்று முளைப்பாரி ஊர்வலம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

-------------

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்கள் விரைந்து தரிசனம் செய்வதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

-------------

*__விளையாட்டுச் செய்திகள்__*

தெற்காசிய த்ரோபால் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் சாம்பியன் பட்டத்தை வென்றன.

ராஞ்சியில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆடவர் பிரிவில் இந்தியா, 2-1 என்ற செட் கணக்கில் இலங்கையை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றது.

மகளிர் பிரிவின் இறுதிப்போட்டியில், இந்தியா 25-23, 25-14 என்ற நேர் செட்களில் பங்களாதேஷை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.

--------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டி பி பிரிவில் இன்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் கனடா 6-0 என்ற கோல் கணக்கில் கத்தார் அணியை வென்றது.

வான்கூவரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே கனடா ஆதிக்கம் செலுத்தியது.

ஏ பிரிவில் மெக்சிகோ - தென்கொரியா இடையிலான ஆட்டம் தற்போது மேற்கு மெக்சிகோவில் உள்ள Guadalajara-வில் நடைபெற்று வருகிறது.

**<<<<The End>>>>**